"நல்ல சமயத்தில் உதவி செய்தீர்கள்" என்று தேனைப்பழிக்கும் குரலினிமை கேட்டுத் திரும்பினான் அவ்விளைஞன். அவன் முன் ஓர் ஆரணங்கு நின்றுகொண்டிருந்தாள். அவள்தான் அந்தப் பல்லக்கில் வந்திருக்கவேண்டும். அழகே உருவெடுத்தாற்போல் அவன் முன்னின்ற மங்கையைக்கண்டு பேச்சுமூச்சற்றுவிட்டான் இளைஞன். அவன் தன்னையே நோக்குவது கண்ட அவள் நாண, நாணம் அவள் அழகுக்கு அழகு செய்தது. "தங்கள் எதிர்பாராத உதவியினால் பிழைத்தேன். தாங்கள் எந்த நாட்டுவீரரோ?" என்று அவனை அரைக்கண்ணால் பார்த்த வண்ணம் வினவினாள் அவள். அவள் கண்களில் மாசற்ற அன்பும் நன்றிப்பெருக்கும் தென்பட்டது. நான் ஒரு ஏழைச்சிற்பி! என் பெயர் நந்தகுமாரன். திருநெல்வேலி மன்னர் கலைகளில் ஆர்வமுடையவர் என்று கேள்விப்பட்டேன். ஆதலின் அவரைக்காணப் போகிறேன் என்று பதிலளித்துவிட்டு "தாங்கள்........." என்று தயங்கினான் "தாங்கள் காணப்போகும் மன்னரின் புதல்வி திருமொழி" என்று அவ்வழகியின் அருகில் நின்ற தோழி கூறினாள். இதை அவள் சொன்னதும் திருமொழியின் முகம் மேலும் சிவந்தது. இப்பொழுது மூடுபல்லக்கிற்கு மூன்று வீரர்கள் காவலாகச்சென்றனர். நந்தகுமாரன் தான் புதிதாகச்சேர்ந்தவன்.

நந்தகுமாரன் தன் கைதேர்ந்த சிற்பத் திறமையினால் திருநெல்வேலி மன்னன் மனதைக் கவர்ந்துவிட்டான். மன்னன், நந்தகுமாரனை ஆண்டிலே இளையவனாயினும் தன் ஆஸ்தான சிற்பியாக நியமித்துக்கொண்டனன். இளவரசி திருமொழி தன்னைக் காட்டெருமை வாயிலிருந்து காப்பாற்றிய அன்றே அவன் பால் அன்பு கொண்டாள். அவனது சீரிய சிற்பத் திறனும் அவளைக் கவர்ந்தது. சிற்பியும் அவள் பால் பேரன்பு கொண்டான். மாசில்லாக் காதல் அவர்களிடையே பரிணமித்து வளர்ந்து வந்தது. அப்பொழுதுதான் நந்தகுமாரன் அவளைப் பிரிந்து மாமல்லபுரம் செல்லவேண்டிய அவசியம் நேரிட்டது.

நந்தகுமாரன் மாமல்லபுரத்திற்குச் சென்றுவிட்டான். எண்ணற்ற சிற்பிகளினூடே அவன், சிலைகளை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தாலும் அவன் உள்ளம் நெல்வேலியிலேயிருந்தது.

உடன் பணியாற்றிய சிற்பிகள் உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கையில் அவன் மாத்திரம் துயரில் மூழ்கியிருந்தான். அவனது உயிர் ததும்பிய சிலைகளைக்கண்டு பல்லவ சக்கரவர்த்தியே போற்றினர். மற்றச் சிற்பிகளும் புகழ்ந்தனர். அவனது மனம் இதிலெல்லாம் ஈடுபடவில்லை. தான் விட்டுப்பிரிந்த காதலியின் நினைவே அவனது உள்ளமெங்கும் நிறைந்திருந்தது. சுருங்கச் சொன்னால் அவன் உயிர் நெல்லையில் இருந்தது; உடல்தான் மாமல்லபுரத்தில் கற்பாறைகளின் நடுவே கவினுறு கற்சிலைகளை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தது. வருடம் இரண்டாகியும் மாமல்லபுரம் பரிபூரண கலைக் கோவிலாக முடியவில்லை. மேலும் இரண்டாண்டுகள் உருண் டோடின. திருநெல்வேலியிலிருந்து ஒரு செய்தியுமே வரவில்லை. நீரை நீத்த மீனெனத் துடித்தான் சிற்பி. பிரிவு அவனது மாசற்ற காதல் தீபத்தை வளர்த்தது.

நான்காண்டுகள் கழிந்து சின்னாட்கள் ஆன பிறகே மாமல்லபுரம் கலைக் கோவிலாகத் திகழ்ந்தது. கண் திரும்பிய விடமெல்லாம் கற் சிலைகள் பொற் சிலைகளோவென இலங்கின தனது பணி முடிந்ததும் தெற்கு நோக்கிப் புறப்பட்டுவிட்டான் நந்தகுமாரன் வழியெங்கும் துர் நிமித்தங்கள் தோன்றியவண்ணமிருந்தன. ஒரு மாதம் கழித்து பட படக்கும் நெஞ்சுடன் திருநெல்வேலி மண்ணை மிதித்தான் நந்தகுமாரன். அவன் வரவை எதிர்பார்த்து சொர்ண பாண்டியன் வரவேற்பிற்கு மகோன்னத ஏற்பாடுகள் செய்திருந்தான்.

வரவேற்பு விழாவில் நந்தகுமாரனின் கண்கள் திருமொழியைத் தேடித்தேடி ஏமார்ந்தன. அவளைக் காணவே இல்லை. அவளைக் காணாமல் அவனது உள்ளம் பரிதவித்தது. என்ன நேர்ந்ததோ என்று அவனது உள்ளம் அஞ்சியது. மன்னனின் பரிசுகளிலெல்லாம் அவன் உள்ளம் ஈடுபாடுகொள்ளவில்லை. அலை பாயும் உள்ளத்தோடு இருப்பிடத்தை அடைந்தான் நந்தகுமாரன்.

மறுநாள் மாலை நந்தகுமாரன் பொருநைக்கரை அமர்ந்த தமிழ்க் கடவுள் கோவிலை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருந்தான். மாலைதோறும் திருமொழி முருகனை வணங்கு வதில் தவறுவதேயில்லை. கோவிலை நெருங்கியதும் இனிய குரலில் நாவுக்கரசரின் திருப்பதிகம் பாடும் ஓசை கேட்டது. அக்குரலைக் கேட்டதும் திடீரென நின்றான் நந்தகுமாரன். அவன் எதிர்பார்த்ததுபோலவே அது திருமொழியின் இனிய குரல்தான் !

திருமொழியும் அவளது ஆருயிர்த்தோழியும் இதற்குள்ளாக கோவிலைவிட்டு வெளியே வந்தார்கள். 'திருமொழி' என்று நந்தகுமாரன் அன்புக் குரலில் அழைத்தான். அவன் அழைத்ததை அவள் காதில் வாங்காததுபோல விரைந்தாள். "இளவரசி இளவரசி" என்று மீண்டும் அழைத்தான் நந்தகுமாரன். பதற்றத்தோடு திரும்பினாள் இளவரசி. அவள் கண்களில் நீர் மல்கியிருந்தது. "நான் உங்கள் இளவரசியில்லை. புதுக்கோட்டை இளவரசனின் மனைவி; என்னை மறந்துவிடுங்கள்" என்று உணர்ச்சி வெள்ளத்தினூடே வார்த்தைகளை உதிர்த்துவிட்டுத் திரும்பி நடந்தாள் இளவரசி. ஆயிரமாயிரம் மின்னல்கள் தன் உள்ளத்தைத் தாக்கியதுபோன்ற நிலையை அடைந்தான் நந்தகுமாரன். கோவில் கற் சிலைகளில் தானும் ஒன்றாகிவிட்டானோ

என்று எண்ணும்படி கல்லாய்ச் சமைந்துவிட்டான். முருகன்கோவில் முன் மண்டபத்திலிருந்த தீபத்தை எங்கிருந்தோ வந்த புயற்காற்று அணைத்துவிட்டுச் சென்றது.

நந்தகுமாரனைப் பிறகு திருநெல்வேலியில் காணவே இல்லை. மன்னனிடம் அவன் சொந்த ஊராகிய திருச்செந்தூருக்குச் சென்றிருப்பதாக மற்றவர்கள் கூறினார்கள். ஒரு நாள் திருச்செந்தூர் கடற்கரையில் ஒரு பிரேதம் ஒதுங்கியது. அது சிற்பி நந்தகுமாரனுடையது என்று அவ்வூர் மக்கள் கண்டறிந்துகொண்டனர். அவனது சடலத்தைக் கடற்கரையிலேயே புதைத்து நடுகல் எடுத்தார்கள். அவன் இறந்த காரணம் யாருக்குமே தெரியவில்லை. நந்தகுமாரன் இறந்த அன்றே புதுக்கோட்டைக்கு அண்மையில் ஓடும் ஓர் ஆற்று வெள்ளப்பெருக்கில் திருமொழி இறங்கிவிட்டாள். அவள் தவறி விழுந்ததாக யாவரும் சொல்லிக்கொண்டனர். அவள் சடலம் அகப்படவேயில்லை. அவளது உடலை அவ்வாறு கீழைக் கடலுக்கே கொண்டு சேர்த்திருக்கும் என்று மக்கள் யாவரும் பேசிக்கொண்டார்கள்" என்று கதையை முடித்துவிட்டு எழுந்தார் பெரியவர். காதல் பாதை கரடு முரடானது என்ற ஷேக்ஸ்பியர் மகா கவியின் வாக்கு என் நினைவிற்கு வந்தது.

THE NEW AUDITORIUM AT PETAI



COLLEGE STAFF 1956 – '57



Sitting: V. Gomatinayakam B. A., R. Ramamurti M. A., P K. Arunachala Gounder, K. S. Ganapathy M. A., L. T., Rao Saheb Alexander Gnanamuttu M. A., (Principal) R. Balakrishna Pillai M. A B. L., S. Somasundaram M. A., L. T. T. V. Subbayya, M A., Z. S. Dharmakkan, M. A., L. T

Standing Ist Row: S. Ramachandran B.A., (Hons), S. Srinivasan B.Sc. (Hons), V. Ramasubrahmanian B.A. (Hons), S. BalasubrahmanianB.Sc., (Hons.), S. Srinivasan B. Sc, R. Seshachalam M. A., P. K. Jacob, M. A., G. Venkata Rao, M. A., P. Muthiah M. A., S. Ganapathy Mudaliar M. A. L. T., A. K. G. Nair M A.

" IInd Row: K. Andiappan, C. Jagannathan M. A., R Narayanaswamy B Sc. (Hons), N Ramiah B.Sc. (Hons), T. V. Kanthimathinathan, B.A. (Hons.) N. Namasivayam M.A., C. Sankaralingam B.A., K. S. Sivanandham, B. Com. (Hons.) T. S. Ramalingam M.A., R Kanagasapapathy.

" IIIrd Row: T. K. Ganapathy, S. M. Peer Mohamed B. Sc., M. Nainar, B. Sc., P Sankaran B. Sc. (Hons), K. Hariharasankaranarayanan B. A., S. Rengachari B. A., R. Thangappan B. Sc., T. S. Chidambaram B. Sc.

ஏன் புகழ்கிறோம்?

A. வண்ணமுத்து

எங்கள் பிரின்சிபாலவர்களை நாங்கள் ஏன் புகழ்கிறோம்?

பிரின்சிபாலவர்கள் கால் நூற்றுண்டுக்கும் மேலாகவே நமது கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்திருக்கிறார்கள்; அதன் காரணமாக நமது நகரப் பிரமுகர்களும் பிறரும் அவர்களைக் கொண்டாடுகிறார்கள். அவர்கள் பெருமை வாய்ந்த பிரின்சிபல்; ஆதலின் பேராசிரியர்கள் அவர்களைப் போற்றுகிறார்கள். கல்லூரியின கடைநிலை ஊழியராகிய நாங்கள் ஏன் அவர்களைக் கொண்டாடுகிறோம்?

எங்களிலே பலரை அவர்கள் பலவழியிலும் முன்னுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். நாங்கள உயர்ந்த படிப்போ, மேலான பயிற்சியோ இல்லாதவர்கள். எங்களிலே தறுதலைகளாய், சோம்பேறிகளாய்க் கீழ்ப்படியாதவர்களாய் இருந்தவர்களைக் கூட கடிந்து நல்லவர்களாகத் திருத்தியுள்ள பெருமை எங்கள் பிரினசிபாலவர்களுக்கே சாரும். ஆதலின அவர்களை நாங்கள் கொண்டாடுகிறோம். அவர்கள் பார்வையிலே அன்பும் ஆண்மையும் கலந்திருப்பதால், நாங்கள் அவர்களிடம் நடந்து கொள்கிறபோது அஞ்சுகிறோம் என்றாலும் அவர்கள் அன்பில் மகிழ்கிறோம்.

கல்லூரியிலே நாங்கள் ஊழியர், அவர்கள் ஏஜமானர்; ஆனால் பங்களாவிலே இந்த வேறுபாடில்லை; நாங்கள் அவர்களுடைய செல்லப் பிள்ளைகள், அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

எங்களுக்கு எங்களுடைய கடமையை அவர்கள் உணர்த்துவார்கள்; உரிமையைச் சொல்லுவார்கள். வாழ்க்கைக்குத் தேவையான புத்திமதியைப் புகட்டுவார்கள். நாங்கள் குறைவின்றி வாழவேண்டும் என்று விரும்புவார்கள். அவர்கள் வாழ்க.

அல்லவை தேய அறம் பெருக வள்ளுவர் கூறும் வழிகள்

கே. சி. கதிர்வேல்
P. U. C.

பண்டைத் தமிழ் நூல்களிற் பல நமக்கு அறநெறியைப்பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் தலைசிறந்தது திருக்குறளேயாம். யானை அடியிலடங்கா அடியில்லை என்றபடி குறளடியில் அடங்காப் பொருளே யில்லை. அந்நூல், நெறியில்லா நெறிதன்னைத் திரிபுணர்ச்சியால் நெறியென்றெண்ணித் தீயவழியிற் செல்வோரை நல்வழிப்படுத்தும் அறிவிலக்கியம். அல்லவை தேய அறம் பெருக வள்ளுவர் தம் நூல் முழுவதும் அரிய, எளிய வழிகள் அநேகம் கூறுகின்றார். ஆதலின் அந்நூலுக்கு 'அறம்' என்றே பெயர் வழங்கிற்று. இதை, 'அறம் பாடிற்றே ஆயிழை கணவ' என்ற புறநானூற்றுப் பகுதியால் அறியலாம்.

நம்மையெல்லாம் படைத்துக் காப்பவன் இறைவன் என்பது நம்நாட்டில் தொன்றுதொட்டு நம்பப்பட்டு வருகிறது. அத்தகைய இறைவனின் தனிப் பண்புதான் அறம். இறைவனது உருவமே அறம். அறத்தினது இயக்கமே இறைவனது இயக்கம். இதனாலேதான் இறைவனை, 'அறவாழி அந்தணன்' என்று வள்ளுவர் கூறிப்போந்தார். இறைவனது இயல்பே அறம் என்பதானல், இறைவன் படைத்த உயிர்களின் இயல்பும் அறம் என்பதைக் கூறவும் வேண்டுமோ? அறம் என்பது ஒவ்வொருவரும் தம்மிடத்தே இயல்பாகக்கொண்ட பண்பானதினால்தான் அல்லவை செய்வாரை நாம் வெறுக்கிறோம். அறம் செய்வாரை விரும்புகிறோம்.

ஒவ்வொருவர் உள்ளத்திலும் அறம் உறைந்து கிடக்கிறது என்பதை வள்ளுவர்

> " தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
> தன்னெஞ்சே தன்னைச் சுடும் "

என்ற குறளில் சுட்டிக்காட்டுகிறார். அல்லவைகளில் ஒன்றாகிய பொய்யினைக் கூறுதல் கூடாது என்பதனையும், அப்படிக் கூறியவிடத்து, அதைக் கண்டிக்க, கூறுபவர் உள்ளத்திலேயே அறம் உயிர் வாழ்கிறது என்பதனையும் தெளிவாக நமக்கு இக்குறள் கூறுகின்றது. நெஞ்சத்தின் இயல்பு அறம் என்பதைக் கூறிய வள்ளுவர் அந்த நெஞ்சத்தில் அல்லவை செய்யும் எண்ணம் மேலோங்காது, அறம் செய்யும் பண்பே உயர்ந்து நிற்றல் வேண்டும் என்று விரும்புகின்றார். ஆதலின் முதற்கண் அறத்தின்கண் மாந்தர் வேட்கையுற வேண்டும் என்பது கருதி,

> " சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
> ஆக்கம் எவனோ உயிர்க்கு "

என்ற குறளில், சிறப்பினையும் செல்வத்தையும் தரவல்லது அறம் என்று அதன் பயனைக் கூறுகின்றார்.

இனி வள்ளுவர், அறஞ்செய்வோர், அறத்தினைப் பொருந்தச் செய்தல் வேண்டும் என்கின்றார்.

" ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல் "

இதில் தன்னால் இயன்ற அளவு பெரிதாக, பொருந்தும் வகையால் விடாமல் அறம் செய்தல் வேண்டும் என்று கூறப்படுகின்றது. ஒல்லும் வகையால் அறம் செய்வது எப்படி எனக் கேட்பவர்களுக்கு விடையாக,

" மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற "

என்றும் கூறி அறம்செய்ய முதலில் மனத்தில் மாசில்லாதவனாக ஆதல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். அறமாவது மாசற்ற நிலை; அவ்வளவே அறம் என்பதாகும் என்கிறது இக்குறள். உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கிலும் ஒளியுண்டாம். மனத்தில் மாசின்றேல் அதன் பயனாகத் தோன்றும் சொல்லிலும் மாசில்லையாம். சொல்லில் குற்றமின்றேல் அது விளைக்கும் செயலிலும் குற்றமில்லை. எனவே மனமாசைத் துடைத்தலே அறமாம். அங்ஙனம் மனமாசைத் துடைக்காது, புறத்தில் அறவோர் போல நடிப்பவர்களின் அறம் போலி அறமாகும். அதனாற்றான் 'ஆகுல நீர பிற' என்கின்றார். மனத்தூய்மையைப்பற்றிப் பல இடங்களில் வள்ளுவர் தம் நூலில் கூறியுள்ளார். அவையெல்லாம் மனத்தூய்மையே அடிப்படை அறம் என்பதை நமக்குத் தெளிவாகப் புலப்படுத்தவே கூறப்பட்டவையாகும்.

இல்வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர் தத்தமது உள்ளத்தே வளர்த்துக்கொள்ளவேண்டிய அறங்கள் பல கிளைப்படும். ஆதலின் வள்ளுவர் அல்லவற்றையெல்லாம் முதற்கண் மனத்தினின்றும் ஒழித்துவிடக் கருதுகின்றார.

" அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்."

என்ற குறளில் அவர், பிறர் உடைமைகண்டு அழுக்காறுகொண்டு அதனை அவாவுறுதலும், பின்னர் அது தமக்குக் கிடைக்காத போழ்தில் கோபமுற்று இன்னாத கூறுதலும் அல்லவை என்பதைக் கூறுகின்றார். அழுக்காறு உற்ற இடத்து ஒருவன் தவறாது அவாவுறுவான். அழுக்காறுடைதலும், அவாவுறுதலும் ஆகிய இரண்டுமே தீமை பயப்பனவாம். இதில் அழுக்காற்றை மாந்தர் மனத்திலிருந்து அகற்ற வள்ளுவர் மேற்கொள்ளும் வழி மிகச்சிறந்ததாம். முள்ளை முள்ளாலேயே எடுப்பது போன்று, அழுக்காற்றை அவாவினாலேயே மாந்தர் வெறுத்தொதுக்கச் செய்கின்றார்

" அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்."

என்ற குறளில் மனிதர்களுக்குச் செல்வத்தின்மேலுள்ள அவாவினைக்கருதி, அழுக்காறு என்னும் பாவி செல்வத்தை அழித்துவிடுவான் என்று எச்சரிக்கை செய்கின்றார்.

அறம் பெருகுமிடத்து அல்லவை தாமே யொழியும். அஃதேபோல் அல்லவை அழியுங் காலத்து அறம் தானே வளரும். ஆதலினறந்தான் வள்ளுவர் 'அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல்' ஆகிய அல்லவைகள் இல்லாததே அறம் என்று கூறுகின்றார். இவ்வாறாக ஒருவன் அல்லவற்றை யெல்லாமொழித்து ஓவாது அறஞ்செய்தல் வேண்டுமெனில் அதன் சக்திதான் யாது? அதையும் கூறிவிடுகின்றார் வள்ளுவர்,

"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை."

என்ற குறளில் உடல் அழியும்போது உயிரைத் தொடர்ந்துசென்று பாதுகாப்பது அறம் ஒன்றே என்பதனை நாம் அறிகிறோம்.

பலவாறாக அறம் வளர்க்கும் முறையினை வள்ளுவர் நமக்கு விளங்கக் கூறுகின்றார். எனினும், ஈறாக அல்லவைதேய அறம்பெருக அவர் நமக்கு ஓர் அருமையான, எளிய வழியினைக் கூறுகின்றார்.

"அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடிய இனிய சொலின்."

என்பதே அவர் கூறும் சிறந்தவழி. அவ்வழி நல்வழி. அதுவே நாம் உய்யும் வழியுமாம்.

கூண்டுக் கிளி

T. L. சுப்பிரமணியன்
2-ம் வகுப்பு, மூன்றாம் பிரிவு

"த்ரீ நாட் ஒன்"

செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்த 301 திடுக்கிட்டு எழுந்தார். அதை மடித்து அருகே இருந்த சன்னலில் சொருகிவிட்டு உள்ளேசென்று "சலாம்" செய்து நின்றார்.

"நேற்று நடந்த களவு சம்பந்தமாக ஏதாவது துப்புக் கிடைத்ததா" என்று மிடுக்குடன் கேட்டார் இன்ஸ்பெக்டர் முருகேசன். அவர் அவ்வூருக்குப் புதிதாய் வந்த இன்ஸ்பெக்டர். வேலையில் இப்பொழுதுதான் அடியெடுத்து வைத்திருக்கிறார்.

"போலீஸார் புலன் விசாரித்து வருகிறார்கள் என்று பேப்பரில் வந்திருக்கு" என்றார் 301. நகைச்சுவை ததும்பப் பேசிவிட்டதாக எண்ணி மகிழ்ந்தார். இன்ஸ்பெக்டர் சிரிக்க வில்லை தானே ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்து நின்றார் 301.

"வேடிக்கை வேண்டாம் 301" என்று சலித்துக்கொண்டார் முருகேசன், மனித இயல்புதானே. புதிதாய் உத்தியோகத்தில் அமர்ந்தவுடன், கடமை தவறக்கூடாது, கண்ணிய மாக வாழவேண்டும், அப்படி நடக்கவேண்டும், இப்படி நடக்கக்கூடாது என்று விதவிதமாக எண்ணி திட்டங்களைத் தீட்டுவார்கள் அவ்வழியில் முருகேசன் தப்பவில்லை.

"நேற்று முன் தினம் குறவர் கூட்டம் ஒன்று நம் ஊருக்கு வந்திருக்கு" என்றார் 301

"களவுக்கும் குறவர் கூட்டத்திற்கும் என்னய்யா சம்பந்தம்? மேலும் இந்தக்களவு, சரியான துப்புத்தெரிந்த ஒருவனாலோ அல்லது ஒரு கூட்டத்தாலோ செய்யப்பட்டிருக்க வேண்டும் பாவம், குறவர்கள் நாடோடிகள். சுதந்திரமாகத் திரியும் மனித இனம்" என்று வேதாந்தம் பேசினார்.

உலகத்தை உணாராதவர் நமது எசமான் என்று முடிவுகட்டினார் 301. "உண்மையான திருடனைக் கண்டுபிடிக்கும் வரை நாலு கூட்டத்தை அடித்து, உதைத்து, மருட்டவேண்டும். அப்படியானால்தான் திருடனும் அகப்படுவான்; நமக்கும் திறமைசாலிகள் என்ற பெயர் கிடைக்கும்" என்றார் 301.

முருகேசனுக்கு எங்கோ ஒரு வீட்டில் நடந்த களவிற்கு, சம்பந்தமில்லாத ஒரு கூட்டத்தை சந்தேகிப்பது வியப்பாக இருந்தது. முருகேசன் முகத்தில் சிந்தனை கோடிட்டது. தன் இருக்கையை விட்டு எழுந்து சன்னல் பக்கத்தில் வந்து வானத்தைப் பார்த்தபடியே நின்றார். நீலவெளி, செங்கதிரோன் மஞ்சள் நிறக் கதிர்களை கக்கியபடி மேல்வானத்தில் மறைந்துகொண் டிருந்தான். எதிரே இருந்த தென்னைமரக் கீற்றில் ஆனந்தமாக இரண்டு பச்சை கிளிகள் கொச்சை மொழி பேசிக்கொண்டிருந்தன. "உலகத்து மக்களே! எங்களைப் பாருங்கள்; எவ்வளவு

ஆனந்தமாக வாழுகின்றோம். கவலையே இல்லாது இந்த வெளியிலே எங்கு வேண்டுமானாலும் நீந்திச் செல்வோம். ஆனாலும், சில மறநெஞ்சம் கொண்ட மனிதர்கள் எங்களைக் கூண்டிலே அடைத்து எங்கள் சுதந்திரத்தைப் பறிக்கின்றார்கள். சுதந்திரம் பெறுவதற்காகக் கூண்டினுள்ளே போராடவேண்டியிருக்கிறது சிறையில் தள்ளப்படும் சில தியாகிகளுக்கு ஏ' வகுப்பும், சிலருக்கு 'பி' வகுப்பும், சிலருக்குச் 'சி' வகுப்பும் கிடைப்பதுபோல், எங்களில் சிலருக்கு கொஞ்சுமொழி பேசி மகிழ்விக்கும் அணங்குகளின் ஆதரவும், பாலும் பழமும் உணவாகக் கிடைக்கும்; சிலருக்கு பட்க்ஷி சாஸ்திரக்காரனின் பளபளப்பான கூண்டும் நெல்லும் மணியும் உணவாகக் கிடைக்கும். அவரவர் கொடுத்து வைத்ததுதானே கிடைக்கும்" என்று ஒரு பெரிய சொற்பொழிவு செய்வது போல் பேசிக்கொண்டே சென்றன.

முருகேசன் சிந்தனை கலைந்தது. இத்தனை அழகான பறவைகளை கூண்டினுள் அடைத்துத் துன்பப் படுத்துகிறார்களே. குற்றம் செய்பவர்களைத்தான் சிறைக்கூண்டில் அடைக்கிறோம் இவைகள் என்ன குற்றம் செய்தன? இவைகள் அழகாக இருப்பதும் கொச்சை மொழி பேசுவதும் ஒரு குற்றமா? இதுவும் ஒரு பொழுதுபோக்குக் கலையா? அன்பும் அறமும் தழைத்தோங்கும் அறநிலையங்களிலும் இக்குறைபாடு இன்னும் தீர்ந்தபாடில்லையே! இப்பாவச் செயலைக் கண்டித்து மக்களுக்கு அறிவு ஊட்டுவதற்காகத்தானே அந்தக் காலத்திலேயே "பக்த இராமதாஸ்" போன்ற கதைகளை எழுதிப்பரப்பினார்கள் என்று பலவாறாக எண்ணிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது தெருவிலே "கிளி வேணுங்களா கிளி, பச்சைக் கிளி, கொஞ்சுங் கிளி பேசுங் கிளி......" என்று கூறிக்கொண்டே ஒரு குறவன் சென்றான். பட்டை மூங்கிலின் ஒரு புறம் தகரக்கூண்டு, அதனுள்ளே ஒரு அழகிய கிளி, மற்றொரு புறம் மூங்கில் குச்சியாலான சிறிய கூண்டு, அதனுள்ளே இரண்டு மணிப்புறாக்கள். இவற்றைத் தோளில் சுமந்துகொண்டு வந்தான். முருகேசனுக்கு அவனைப்பார்த்ததும் சிறிது வெறுப்பும் ஆத்திரமும் வந்தது. உடனே 301ஐ கூப்பிட்டு அந்தக் குறவனைக் கூப்பிடச்சொன்னார்

301 வெளியே சென்று "டேய்! டேய் குறவா! எலே! எசமான் கூப்பிடுகிறாரு வாடா" என்றார்.

முருகேசனுக்குச் சிரிப்பு வந்தது. சென்ற வாரம்தான் "மரியாதை வாரம்" கொண்டாடினார்கள். குறவனுக்கு, 301-ன் பாட்டன் வயது இருக்கும்.

301 கூப்பிட்டதும் குறவன் பதறினான். அவன் குடல் நடுங்கியது பேச்சில் சக்தியில்லை "நானுங்களா......" என்று உளறியபடி நடுங்கும் கால்களுடன் உள்ளே வந்தான்.

முருகேசன் குறவன் முகத்தைப் பார்க்கவில்லை. கூண்டையே நோக்கினார். கிளி தன் சிறிய அலகால் கூண்டுக்கம்பிகளைக் கொத்தி உரிமைப்போராட்டம் நடத்திக்கொண்டிருந்தது இன்ஸ்பெக்டர் தன்னை நோக்குவதை அறிந்து "வயக்கம், வயக்கம்" என்றது. அந்தக் கிளிக்கு

யாரோ 'வணக்கம்' என்று சொல்ல கற்றுக்கொடுத்திருக்கிறார்கள் என்பதை முருகேசன் ஊகித்துக் கொண்டார்.

இன்ஸ்பெக்டர் கூண்டையே மிரளமிரளப் பார்ப்பதைக்கண்டு குறவன் திகில் அதிகமாயிற்று. பயத்தால் அவன் உடல் மேலும் நடுங்கியது. மூங்கில் பட்டையும் அதிலே தொங்கிக்கொண்டிருந்த கூண்டுகளும் நடுங்கின. இன்ஸ்பெக்டருக்கு அவன் நடுக்கத்தின் காரணம் புலப்படவில்லை. குற்றம் செய்தாலும் செய்யாவிட்டாலும் போலீஸ் என்றாலே சிலர் இப்படி நடுங்குகிறார்களே என்று எண்ணினார். இதற்குள் குறவன் கூண்டுகளை கீழே வைத்துவிட்டு இன்ஸ்பெக்டர் காலில் விழுந்தான்.

“சாமி, நான் ஒண்ணும் தப்பு செய்யலீங்க. என்னை நம்புங்க. இந்த மூங்கில் கூண்டு நானே முடைஞ்சதுங்க. அதிலே கிடக்கிற புறாக்களும் நான் கண்ணிபோட்டு பிடிச்சதுதானுங்க. இந்தத் தகரக் கூண்டை நான் திருடலேங்க. அச்சம்பட்டிக்கு போகிற வழியிலே மாத்தடியிலே கிடந்ததுங்க. கீழேகிடந்துதான் எடுத்தேனுங்க. திருடலேங்க” என்று கதறினான்.

“பரவாயில்லை. அந்தக் கிளியை எடுத்து வெளியே விடு” என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

“நீங்களே வச்சுக்கிடுங்க சாமி, நல்லா பேசுங்கிளிங்க” என்று கிளியைப் பிடித்து வெளியே விட்டான். அதனால் பறக்கமுடியவில்லை. தத்தித் தத்தி நடந்தது. “வளர்த்தவங்க சிறகை எடுத்திருப்பாங்க; ஆனால் நாங்க அப்படியெல்லாம் செய்யமாட்டோம்'க” என்றான்.

'கிளிக்கு விடுதலை கொடுத்தும் பயனில்லாமல் போய்விட்டதே! சிறகிழந்து பறக்கமுடியாமல் கழுகுக்கோ கருடனுக்கோ இரையாவதைக் காட்டிலும், மீண்டும் கூண்டில் அடைத்து யாரிடமாவது வளர்க்கக் கொடுத்துவிட்டாலும் நல்லது' என்று எண்ணினார். திடீரென்று 301
'எசமான் களவுக்கு துப்புக் கிடைத்துவிட்டதுங்க' என்று கத்தினார்.

“என்னய்யா!”

“களவு நடந்த வீட்டிலே ஒரு குழந்தை என் கிளி போயிட்டுதேன்னு அழுதுகிட்டிருந்ததுங்க களவு செய்யப்போன இடத்திலே கிளி கத்தியிருக்கும் கூண்டோடு எடுத்துச் சென்றிருப்பார்கள்” என்றார்.

குறவன் எனக்கு ஒன்றும் தெரியாதுங்க என்று கத்தி அழ ஆரம்பித்து விட்டான். இன்ஸ்பெக்டர் அவனை அடக்கி அமைதியாக இருக்கும்படி கண்டித்துவிட்டு. களவு நடந்த வீட்டிற்கு ஆள் அனுப்பினார். அவ்வீட்டார் வந்து கிளிக்கூண்டை அடையாளம் காட்டினார்கள் உடனே நான்கைந்து ஜவான்களுடன் ஜீப் காரில் குறவனைக் கூட்டிக்கொண்டு கூண்டுகிடைத்த இடத்தை பார்க்கச் சென்றார்கள் நன்றாக இருட்ட ஆரம்பித்துவிட்டது. ஊரைவிட்டு காட்டினுள்

வண்டித் தடத்தின் வழியே தன் ஒளி பொருந்திய கண்களை அகலத் திறந்துகொண்டு 'ஜீப்' வேகமாய் பறந்தது. குறவன் "அதோ அந்த திருப்பத்திற்கு அடுத்தாற் போல் அந்த மரம் இருக்கிறது" என்றான். கார் திரும்பியவுடன் அந்த மரத்திற்கு நேராக கார் வெளிச்சம் பட்டது. வெளிச்சத்தைக் கண்டதும் இரண்டு உருவங்கள் எழுந்து ஓடின. கார் விரைவாகச் சென்று நின்றது. மரத்தடியில் ஒரு குழி தோண்டப்பட்டிருந்தது. அருகே ஒரு சிறிய துணியில் சில நகைகளும் வெள்ளிச் சாமான்களும் கிடந்தன. இன்ஸ்பெக்டரும் இன்னும் இரண்டு ஜவான்களும் அந்த உருவங்கள் சென்ற திசையில் பிரகாசமான டார்ச் விளக்குடன் சென்றார்கள். 301 குறவனை இரண்டு போடு போட்டு ஜீப்பின் அருகே உட்காரவைத்து காவலாக நின்றார். உருவங்களின் பின்னே சென்றவர்கள், ஏதோ சலசலவென்ற சத்தம் கேட்டு நின்றார்கள். இன்ஸ்பெக்டர் தன் கைத்துப்பாக்கியால் இருமுறை ஆகாயத்தை நோக்கிச் சுட்டார். இப்பொழுது தண்ணீரில் சலசலக்கும் சத்தம் அதிகமாகக் கேட்டது. சிறிது சென்று பார்த்தபோது இரண்டு பேர் நடுங்கியபடி கையில் வேல்கம்புகளுடன் நின்றார்கள். அவைகளை கீழேபோட்டுவிட்டு அருகே வராவிட்டால் சுட்டுவிடுவதாகப் பயமுறுத்தவே, அவர்கள் இருவரும் வேல்கம்புகளை கீழே எறிந்து விட்டு, அருகே வந்தார்கள். இருவரையும் காரின் அருகே கொண்டுசென்றார்கள். 301, குறவனை 'உன்னுடைய ஆட்கள் தானே' என்று அதட்டினார். குறவன் என்னுடைய ஆட்களே இடையா துங்க என்று பார்க்காமலே கூறினான். இன்ஸ்பெக்டர் இருவர் முகத்திலும் 'டார்ச்' அடித்ததும் எல்லோரும் பார்த்தனர். 301 உடனே திடுக்கிட்டார். 'எசமான்! இவன் வெகு நாட்களாக போலீஸ் கையில் அகப்படாமல் தப்பித்துவரும் பிரபல கேடி கட்டாரி" என்றார். அப்பொழுது தான் குறவனுக்கு உயிர்வந்தது. 'குறவர் கூட்டத்துக்கும் திருடனுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று கேட்டீர்களே; உண்மையான திருடனைக் கண்டுபிடிக்க குறவன் எவ்வளவு உதவியாய் இருந்திருக்கிறான் பார்த்தீர்களா! இதுதான் நமது 'டிபார்ட்மெண்டின்' பெருமை" என்றார் 301.

இன்ஸ்பெக்டர் 301-ன் அனுபவத்தைக்கண்டு வியந்தார். இருந்தாலும் கிளியினிடத்தில் இரக்கம் காட்டியதே இவ்வளவு பெரிய திருடனைப் பிடிப்பதற்கு சாதகமாக இருந்தது என்றும் எண்ணினார். தனக்கு மிகுந்த புகழைத் தேடிக்கொடுத்த கூண்டுக்கிளியை அவரால் மறக்க முடியுமா!

THE N. C. C. UNIT



THE SOCIAL SERVICE LEAGUE



THE M. D. T. HINDU COLLEGE ATHENAEUM
1956 - 57



Sitting : (*L. to R.*) R. Velayutham, IV Cl. (Student Chairman), S. Srinivasan, M.A., (Vice-President), Principal Alexander Gnanamuttu, M.A., (President), A. K. G. Nair, M. A., (Vice-President), K. Mohamed Farook, II Cl. (Secretary)

Standing : (*L. to R.*) K. A. Muthukumaraswamy, P. U. C., N. Thisairaj, II Cl., K. Ananthanarayanan, II Cl. K. C. Kathirvel, P. U. C., C. R. Gomathinayagam, P. U. C., K. Chidambaram, III Cl. C. Krishnan, IV Cl, A. Sadayappan, P. U. C.

A Heroic Chapter in the History of the Hindu College

By
K. S. SONACHALAM, M. A., *
Dy Director. Economic Survey of Madras.

The period of eleven years from 1932 to 1943 during which I had the privilege of being a member of the staff of the M. D. T. Hindu College deserves to go down as a heroic age in the annals of this hoary institution. It would be altogether impossible for the post-World-War II generation to visualise the conditions of life in the pre-war decade. Under the catalytic influence of the twin forces of Political Freedom and Planning for Growth, production, income levels and employment opportunities, have undergone an amazing sea-change. But in the Thirties, the terrible Depression, which has since won the strange epithet of " Great " in world history, has laid the country low. Tirunelveli, an essentially agricultural district, was hit not only by the price crash of primary produce but also by a series of harvest failures. Even the basin of the perennial " Porunai " river suffered, not to mention the dry taluks of Nanguneri, Koilpatti and Sankaranainar Koil. Agricultural incomes disastrously shrank; debts furiously mounted, their real burden growing several fold. Rural insolvency reached epidemical dimensions.

Commerce and industry languished and decayed. State revenues dwindled: recruitment to Government services was cut to the bone. Retrenchment and scaling down of salaries became the order of the day. Unemployment assumed massive proportions. The ranks of the educated unemployed swelled up, darkening with their hideous shadow the horizon of the younger and drastically discounting the value of higher education in the eyes of the older generation. Parents were financially and psychologically set against giving higher education to their children. Collegiate education thus became heavily discredited.

Economic conditions and parental attitude apart, the legitimate feeders of Colleges that are high schools were in the early Thirties far fewer in number, perhaps less than one-third the number of high schools with less than one-fourth the number of eligible S. S. L. Cs. of the present day. The problem of admission to Colleges existed then as now but its character was different. Instead of students struggling to get admission as now, Colleges struggled and competed with one another to get students.

* Old boy of the College and Professor of Economics from 1932—'43.

While these factors were common to all the Colleges in the district, the Hindu College suffered from two special handicaps. The first was the absence of high schools, except only one, which could be legitimately looked upon as her feeder; other Colleges had quite a number of high schools attached to them by denominational, managerial and other bonds. For this sorry state of affairs, the Hindu community of the district was to blame, who did open schools but in an isolated and highly uncoordinated manner and the Hindu College could not be sure of them as feeders. The second handicap stemmed from the sudden exodus in 1928 of the Principal and some members of the staff the reasons for which need not now be gone into. This event, magnified by the character of contemporary politics, provoked certain sections of the Hindu Community to tacitly boycott the College and send their children to other Colleges even at some expense and inconvenience. As if to make amends, the management introduced some changes in the staff which, actuated as they were by non-economic motives, brought the College to the verge of a financial catastrophe. The current revenues were insufficient to meet the expenses and the College had to live on its capital. Yet the salary of the staff fell into arrears for more than four months.

While the successive deficit budgets were thus gnawing into the capital assets of the institution and creating an extremely untenable situation, a fresh bolt hit the College in the shape of an imperative demand by the University of Madras for a permanent endowment fund of One lakh of rupees. At this stage, it should be mentioned that financial difficulties had almost been an endemic disease with the Hindu College. In the past, the College has passed through atleast one financial crisis in each decade. Every time it had been tided over by the strenuous efforts made by the management which, however, never made an all-out effort to place the College on a sound and stable financial footing. In retrospect, it may be argued that the early fathers of the College should have not only worked for stability but also for dynamic expansion. It should be admitted that a long-range planning was a desideratum and feverish efforts, made periodically to overcome crises, had left the usually generous Tirunelveli public rather cold towards this College, that looked like a perennial liability. In 1932 when the University issued an ultimatum for the immediate payment of atleast one instalment, before a specified date, a fresh endeavour to raise funds for the College was viewed by the management with the utmost pessimism, if not despair.

A hydra-headed problem thus confronted the College in 1932 – an unbalanced budget, strength of the College dipping to the nadir, accummulated arrears of salary of the staff, the public of Tirunelveli tired of coming to the rescue of the College and the Great Depression with its baneful influence upon the incomes of parents and the value of collegiate education. Heroic efforts were in dire need to drastically cut expenses and yet keep the staff not only contented and enthusiastic in their work, step up the strength of the College by attracting more students, break records in University examination results and restore the popularity of the College, inculcate a missionary zeal among the staff and an ardent fervour for the alma mater among the students, launch an all – out campaign for raising funds and instil optimism among the staff, students, public and last and most important the management of the College. This desperate situation cried for and luckily did get a man of titanic energy and Herculean courage to steer the College to a haven of safety, strength and prosperity.

It was in the last week of June 1932, the reopening day, I had the pleasure of first meeting Principal Alexander Gnanamuttu and reporting for duty as Lecturer in Economics. He was then in the prime of life, hardly 32 years, a robust stalwart of 5' 10", with a broad forehead that revealed his intellect and a prominent chin, his firm determination. In complexion fair as gold, in dress, so smart and exquisite as to be mistaken for a dandy, in diction, excelling an Oxon, and in courtesy a Persian, he impressed me at once as one on whom Gods have lavished all their gifts. Principal Alexander Gnanamuttu has been endowed with a rich array of talents to grapple with this seemingly hopeless situation successfully.

From this distance of time, it is not possible to describe in detail the grand strategy adopted to save the institution from being reduced to a high school, an idea born of utter despair and lethargy that haunted a significant section of the Educational Society, the proprietors of the Hindu College. A brief and rapid review of the salient features of the battle would suffice. Everything depended upon augmenting the strength of the College. The Christian Principal of the Hindu College devoted his first attention to this task. For the first time after several years, Tirunelveli Public was pleasantly surprised to see a trickle which rapidly developed into a regular stream of boys and girls, Hindu, Christian and Muslim crossing the Tambaraparani Bridge to study in the Hindu College.

Small donations were collected by him for providing scholarships to deserving students.

No college can attract students by granting scholarships. Efficient tuition and excellent results alone could do the trick. Principal Gnanamuttu had an uncommon gift of inspiring his staff. It would never have been an easy task under the conditions prevailing at that time, particularly when arrears of salary accumulated for over four months. But he was lucky in the fact that his staff of about a dozen were all above want, whether drawn from the home district or elsewhere. All of them had dedicated themselves to teaching as a profession knowing full well that it was the sorriest of trades. Alexander Gnanamuttu was quick in discerning this virtue and great in exploiting it to the utmost to the benefit of the students. He too set the example of thorough and meticulous preparation and all the members vied within one another and lo! year by year the College began to establish records in the University examinations. The reputation of the College was restored and the strength rapidly increased New subjects were provided at a later stage which further helped to increase the student population.

The crucial problem for the survival and the growth of the College, however, was finance which became an additional portfolio, external as it were, of the Principal. In solving this problem the Principal in his characteristic way enlisted the full support and hearty cooperation of his staff. It was one of his original ideas to have a monthly staff dinner – a rich and lavish affair which created the envy of the people around who even maliciously remarked that the Hindu College staff should have been richly paid to afford such luxurious dinners. But the Principal, it is possible to say retrospectively, should have had an ulterior objective in meeting his staff informally and fraternising with them. It was these dinners which helped him to establish personal contact and secure the loyal devotion of the staff. It was March 1933. The University ultimatum had come. The situation was tense. Whether the College would be reopened in the following June or sink into a High school was trembling in the balance. The usual monthly dinner came. But instead of the post-prandial talk, the Principal put on a grim face and tuned the company for a serious discussion. Next day or after, it was unanimously decided, the Principal accompanied by the staff should meet the Secretary of the College, Shri I. C. Iswaram Pillai and appeal to him to pay the first instalment forthwith. What should be done if this appeal had not the desired effect was also charted out. It was the unprecedented, daring

and unique proposal of going out with a begging bowl. Fortunately the appeal had the desired effect, for the Secretary came out with an immediate payment of the first instalment. This did not result in abandoning but only in more vigorously pursuing the begging campaign because the motto of Alexander Gnanamuttu was work, more work and still more work. At the beginning of the vacation a mammoth procession started from the College led by the Principal followed by the staff and students and at a respectable distance by the Victoria of the Principal. The Procession marched through the four car streets of Tirunelveli to the tune of the College Anthem, inspiringly sung by the sweet-throated V. V. Satagopan, then a student. At every significant corner and crossroads, a bench from the Victoria was brought out and the Principal with his lieutenants mounted on it and appealed to the public to help the Hindu College. I still find ringing in my ears the brief crisp appeal of the Principal and the Tamil rhetorical cascade of Arunachala Gounder The whole march did not look like a beggars' trek but a triumphant march After this thunderous opening the members of the staff and students dispersed and went to their respective places to vigorously pursue their campaign of begging. It was no vacation of rest but continuous begging and successful begging too as everyone in the campaign achieved or exceeded the target. Special mention should be made of the deep enthusiasm hown by the late Mrs. Mercy Gnanamuttu who, with the lady students of the College, worked all through the vacation, substantially augmenting the collections. The success of this begging campaign helped the College to turn the corner.

The major problem of providing the full Endowment Fund still remained to be tackled. How the famous philanthropist brothers of Mathurai, Diraviam Pillai and Thayumanaswamy Pillai, were approached by the Principal, Sri M. D. T Kumaraswami Mudaliar and Sri I. C. Iswaram Pillai, the then Secretary and President of the College and negotiations for a munificent donation of one lakh of rupees was successfully concluded, is too well known to need detailed mention here. During this period of negotiation and appeal, there were several ups and downs and all though the Principal's perseverance contributed not a little to the final success.

Even after the University authorities were fully satisfied, the struggle and sacrifice of the staff had to continue for several years. The arrears were paid but the scales of salary were still low. It was during these years that the question of keeping up the morale of the staff should have become increasingly difficult.

In this phase of the history of the College too, Alexander Gnanamuttu was able to secure loyal and devoted work from his staff. The credit goes to his infinite tact as well as to the missionary zeal of the noble band of lecturers.

Maintenance of discipline in a college is a very difficult job even under normal conditions. But the Hindu College in this period of eleven years passed through unusual tribulations. The problem was rendered complex on account of the co-education experiment. Yet the record of discipline was superb and it was in no small measure due to the administrative excellence of the Principal and the sober and wise conduct of the students. The Hindu College has always been a non-sectarian, non-communal, national institution. Though its appellation is Hindu, Muslims and Christians, backward and scheduled classes have been freely admitted from its very inception almost a century ago. A tradition has grown up in which students have been given full freedom which they never abused. From my personal experience I can say that co-education was such an absolute success that I have seen boys being more shy than girls out of deep regard for the hoary tradition of the institution as well as to the paternal care with which the Principal looked after his students. It has been my fortune to have attended more than ten break-up socials. To hear on these occasions the outgoing students singing paens of praise of the Principal and the College used to be a thrilling experience and a recognition of the nobility of the youth that was the student population of the College. They bore the greatest testimony to the high level of culture that the Principal instilled in the youthful hearts.

It is more than fourteen years since I left this great Institution. Since then the College has grown from strength to strength and the staff appears to have nearly quadrupled under the fostering care of the veteran Principal. A comparison of the situation in 1932 with that in 1957 will reveal the measure of the stupendous achievement for which the foundations were well and truly laid in the first eleven years which are indeed the heroic phase of the College history.

Principal Alexander Gnanamuttu is a person who can never rest on his laurels. Even after having steered the College out of the squally weather of the Thirties he is still as dynamic as ever. In the last year his dynamic energy found expression in the construction of the huge Auditorium in the New College campus at Pettai. He broke all records in the expeditious collection of necessary funds and the construction of this noble structure which deserves to be called after him in commemoration of his services to the Hindu College.

Growth is a sign of living. Growing pains seem to affect Institutions not only in infancy but in all stages. Five years hence this hoary Institution will be celebrating its centenary. Even at this age, the College is confronted by two serious problems. The Pettai scheme has to be completed and the courses of study have to be increased to suit the Reorganised scheme of University Education. Once again Herculean efforts are needed. The present problems should be viewed as though the College is poised for further growth and expansion and a new opportunity has been created for further constructive endeavour.

College Notes

By
THE COLLEGIAN

WE reopened this year on the 20th of June - sufficiently early to get the new Pre-University course started. About the success or failure of this great experiment, it is much too early to predict, but the change over was smooth and uneventful and people who had their own misgivings regarding this course had to change their mind. We had asked the University to permit us to admit a total of 320 and to work it in four sections and the necessary permission was granted. The only new subject that we introduced in the Pre-University course was Elements of Commerce. Within two or three days of the reopening, the maximum numbers were admitted into the Pre-University class and the Junior B. A. class. The strength of the College at the beginning of the year stood thus:

Pre-University	...	320
Senior Intermediate class	...	271
Junior B. A. class	...	115
Senior B. A class	...	109

The Donor's Day this year was celebrated on the 6th of July 1956, under the presidentship of Sri A. Nagaswamy Iyer, B. A., B. L., our District Judge, when prizes were given to the top scorers by Mrs. Ponnammal Diraviyam Pillai. One unique feature of the Donor's Day Celebration this year was the presentation of two Souvenirs to our Principal, one by the Managing Committee and the other by Mrs. Diraviyam Pillai on his completion of 25 years' of service as Principal of this Institution.

Three days later our Principal was honoured by the Syndicate of the University of Madras in the Senate House under the presidentship of the Chancellor, Sri Shri Prakasa, the Governor of Madras. Eulogistic speeches were made by the Chancellor and the Vice-Chancellor and a magnificent Silver plaque was presented to him on his signal service to the Hindu College for a quarter of a century. A full account of the Silver Jubilee celebration appears elsewhere in this issue.

Our results in the Intermediate and B. A. Examinations conducted by the University were quite good. In the Intermediate we secured 16 First classes, 34 Second classes and 78 Third classes.

INTERMEDIATE

Complete passes	...	62·7 %
English	...	81 %
Tamil	...	94 %
Sanskrit	...	88 %

Part III

Mathematics, Physics & Chemistry	...	76 %
Nat. Science, Physics & Chemistry	...	60 %
Ind. History, Mod. History & Logic	...	53 %
III D Tamil.	...	44 %

B. A.

Part I.	English	...	81 %	
Part II	Tamil	...	94 %	18 Second classes.
	Sanskrit	...	100 %	1 First class & 7 second classes.
Part III	i-b Mathematics		82 %	8 First classes 7 Second classes.
	iv-b Economics		74 %	5 Second classes

The Principal was putting his heart and soul into the construction of the Recreational Hall *cum* Auditorium at Pettai. He succeeded in getting a grant of Rs 32,500 from the Centre and the remaining Rs. 20,000 was collected within two months by the unsparing efforts of the Principal, the Staff and the students of the College. By November this magnificent building measuring 135' x 50' was completed.

The members of the N. C. C. unit of our College and the members of the Social Service League contributed many hours of hard unskilled labour in the construction of the Auditorium at Pettai. The Annual N. C. C. camp was held at Nanguneri for two weeks beginning from the 27th of December 1956. The cadets took the B Certificate examination on the 4th of March 1957.

The College Athenaeum has been doing good work with Mr. R. Velayutham of class IV as Student Chairman and Mr. Mohamed Farook as Secretary. The Sanskrit Association also conducted a good number of meetings during the year.

The College Sports Day was celebrated with the usual enthusiasm on the 2nd of March 1957 under the presidentship of the Rev. K. A. Soosai, S. J., Principal and Rector of St Xavier's College, Palamcottah. Mr. A. P. Sankaran of the Third Class was adjudged the College Champion and the Pre-University class as the Champion class for 1956 – 57.

Two of the Senior Members of the Staff Messrs. V. Gomathinayakam (English) and R. Balakrishna Pillai (History) are retiring from service after 30 and 25 years of exceptionally good work to this Institution. Appreciative articles about these gifted teachers will be found elsewhere in this Issue. The Principal of this hoary Institution after record service as Head of this College is also relinquishing office and taking up work as Principal of Dr. Alagappa Chettiar College at Karaikudi. We wish the retiring members long life of restful peace and we wish our beloved Principal who has been editing this Annual for the last 16 years greater honours in his new and bigger sphere of activity at Karaikudi.

Printed by S. S. PILLAI of the Ganesan Printing Press, Tinnevelly Junction for the Principal, The Madura Diraviyam Thayumanavar Hindu College, Tinnevelly 3—1957.